

# நயினை நாகபூசணி அம்பாள் தோத்திரத்திரட்டு

அமரர் திரு. தி. அருணாசலம்

அவர்களின்

நினைவு வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினை நாகபூஷணி அம்பாள்

# தோத்திரத் திரட்டு

ஆக்கம்:

அமரர் நயினை தியாகர் அருணாசலம்

29.01.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த
அன்புத் தந்தை அமரர் வே. தி. அருணாசலம்
அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குலதெய்வங்கள்



பிறப்பு
03.02.1921

இறப்பு
30.12.2011

அமரர்

## திரு. தி. அருணாசலம்

திதி வெண்பா

ஆண்டுகர வதனி லானதொரு மார்கழியில்
பூண்டுவரு பூர்வபக்க ஷஷ்டியிலே - நீண்டபுகழ்
சேரும்தியாகர் அருணாசலப் பெயரோ னிறைவனடி
சாரும் திதியென்று சாற்று -



பிறப்பு
07.08.1924

இறப்பு
04.05.2002

அமரர்

## திருமதி. அ. கனகாம்பிகை

திதி வெண்பா

சித்திர பா னாண்டில் திகழ்சித் திரை அபரம்
இத்திரையிலட்டமியில் ஈசனடி - உத்தமியார்
பாரிஅரு ணாசலத்தின் பாவை கனகாம்பிகையார்
சேர்ந்தார் இறைதாள் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடு

வரலாற்றுப் புகழ்கொண்ட நயினாதீவின் பாரம்பரியச் சிறப்புமிக்கக் குடிகளில் ஒன்றான அமரர்கள் தியாகர் அன்னப்பிள்ளை தம்பதியரின் அருமைப்புதல்வர்களில் ஒருவராக அமரர் அருணாசலம் வாய்த்தார்கள். தனது இல்வாழ்க்கைத் துணையாக வேலணையினைப் பிறப்பிடமாகக் கொண்ட திருவாட்டி கனகாம்பிகை அவர்களை வரித்துக் கொண்ட அருணாசலம், இல்வாழ்வின் பயன்களிலொன்றாக ஜெயமலர் (உபபீடாதிபதி, கோப்பாய் கல்வியற் கல்லூரி) வைத்திய கலாநிதி மைதிலி, மனோரமா (முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு), மாலதி (இலங்கை மின்சார சபை), மஞ்சுளா (ஆசிரியை), மகபதி, (ஜேர்மனி) ஆகியோரைப் பெற்றெடுத்து அவர்களை வாழ்வில் நிலைப்படுத்தப் பெரும்பாடுபட்டார்கள். திரு. தியாக லிங்கம்; (அதிபர், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை) வைத்திய கலாநிதி அருளேந்திரன் (இலண்டன்), திரு. குகானந்தன் (ஜேர்மனி), ஸ்ரீரங்கநாதன் (ஆசிரியர்), திருமதி விஜிதா (ஜேர்மனி) ஆகியோர் அன்னாருக்கு அருமை மருமக்களாக வாய்த்துக் குடும்பத்துக்கு அணிசேர்த்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்சொல்லும் பேரக்குழந்தைகளாக ஆரணி, தியாசாயனி, மயூரசாகித்தியன், கிருஷ்ணவி, சங்கவி, யரோஷன், நந்தகிஷோ, தனகஜாயனி; லுக்சியா, டினுராஜன், பவனிகா ஆகியோர் அமைந்தனர்.

அருணாசலம் அவர்களுடன் அமரர்கள் கந்தையா, இராசம்மா, வாலாம்பிகை, காங்கேயன் மற்றும் சுவாமிநாதன், மீனாட்சி, விசாலாட்சி, வைத்திய கலாநிதி சட்டத்தரணி திருநாவுக்கரசு ஆகியோர் உடன் பிறந்தனர். இயல்பாகவே உடன் பிறந்தவர்கள் மீதும் அவர்களுடைய பிள்ளைகள் மீதும் பெரிதும் வாஞ்சையினை வெளிக்காட்டும் அமரர், சொற்ப ஊதியத்தில் பணியில் இருந்த காலத்தில் கூட சிறுதொகைப் பணத்தை மட்டுமே தனது குடும்பச் செலவுகளுக்காக எடுத்துக் கொண்டு மீதித்தொகையைத் தனது அருமைத்தம்பி சட்டத் தரணி திருநாவுக்கரசு அவர்களை ஒரு மருத்துவராக உருவாக்குவதற்காகச் செலவிட்ட ஒரு 'முன்மாதிரி யான உடன் பிறப்பாகத்' திகழ்ந்தார்.

எளிமையான வாழ்விற்கு தன்னை பெரிதும் பரிச்சயப்படுத்திக்கொண்ட அமரர் ஊரவர், அயல வர், உறவினர் என எவருடனும் மிகவும் இங்கிதமாக நடப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். கூடிய வரை இறை சிந்தனையிலேயே தனது காலத்தின் பெரும் பகுதியைக் கழித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்முகப்பட்ட இலக்கியப் பரிச்சயத்தி னாலும், கவிபுனையும் ஆற்றலினாலும் தனது பெரிய தந்தையாரான வரகவி நாகமணிப் புலவரின் வாரிசாகப் பார்க்கப்பட்டவர் அமரர் அருணாசலம். தேவார திருவாசகங்கள், மற்றும் திருப்புகழில் அமரருக்கு மிகுந்த 'தாடனம்' இருந்தது. நாவுக் கரசரின் திருத்தாண்டகம் மற்றும் திருப்புகழில் எந்த விடயத்தைக் கேட்டாலும் சட்டென குறித்த பாடல் களை நினைவில் கொண்டுவந்து விடையிறுப்பார். மனனத் திறனில் இவர் பலருக்கும் சிம்மசெப்பனமாக விளங்கினார். தனது வாழ்க்கைக் காலத்தில் நாகபூஷணி அம்பிகை மீது தீராக்காதல் கொண்டி ருந்த அமரர், அதன் வெளிப்பாடுகளாக அவ்வப் போது பல்வேறு தோத்திரப் பாடல்களை எழுதினார் கள். அவற்றில் பல கால வெள்ளத்தில் அள்ளுண்டு போயின. அவற்றள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவரது நினைவாக வெளியீடு செய்ய விரும்பினோம். அமரருக்கும் இது உவப்பாக இருக்கும். இத் தோத்திரப்பாடல்களைப் பாராயணம் செய்து அடியவர் பயன்விளைக்க வேண்டும் என்பது எமது விருப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டு அட்டவணை குறிப்பு.
## சொற்பனத் தாண்டகம் அம்பிகை.

01. கணபதியும்
02. கடல் நடுவே
03. பப்பரவன்
04. பொட்டிட்ட
05. ஆலவாய்
06. தில்லைப் பிடாரி
07. மதலையாய்
08. எல்லாரும்
09. தக்கனுடைய
10. செம்பவள
11. பல்கணமும்
12. ஏழுலகும்
13. சூரனுடல்
14. கருவாய்
15. வளர் நயினை
16. வினையே விளைவே

## அம்பிகை அந்தாதி

01. கண்ணே மணியே
02. விரவிவரவே பரவும்
03. எங்கே சென்றும்
04. அருளைக் கண்டு
05. மாதா என்றும்
06. பணியும் பத்தர்
07. திகழும் வடிவே
08. நெஞ்சத்துறையும்
09. கீதம் பாடும்
10. உள்ளே இருந்து
11. அருளே தருவாய்
12. தீரா வினைகள்
13. நிலவும் அன்பும்
14. அடியார் கூடில்
15. கொடுப்பாய் புவியில்
16. மறவோம் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அபயம் தருவாய்
18. உய்யத் தருவாய்
19. சிறுமையானேன்
20. மருவி நின்று
21. நின்றால் நயினை
22. செப்ப மாட்டேன்
23. அம்மை நீயே
24. மலை மகளானாய்
25. உயிரெலாம்
26. உலகினைப் படைத்து
27. கோயிலை அமைத்து
28. ஓசைகள் கொடுத்து
29. பாரதில் கலையும்
30. நாற்றிசை
31. நற்பதியிது
32. கண்ணீரைச் சிந்தி
33. உத்தமி உலகாள்
34. தலைவியே தவமே
35. எல்லையில்லா
36. மொட்டிடை மலர்ந்த
37. புண்ணியம் மிக்க
38. நாகபூஷணி
39. நம்மை பெற்றவள்
40. சுற்று முற்றும்
41. பாதம் நாளும்
42. எண்பத்திரெட்டும்
43. சாவதற்கென்றே
44. சித்தி தருவாள்
45. அண்டினோர்க்
46. வேதம் ஓதுவர்
47. வெந்த நீறுடன்
48. பாரும் விண்ணும்
49. மண் பொருந்தி
50. பக்தியால்
51. நீல வண்ணனின்
52. சூலினால்
53. உற்ற பேர்
54. நாகயீஸ் பரி
55. பக்தி மேலிட
56. வந்து நித்தம்
57. தக்க மாந்த
58. நன்று நன்றென
59. தப்பிலாது சரணம்
60. பருவத்தே பயிர்
61. பொக்க மாகிய
62. கருவிலே இருந்துன்னடி
63. பட்டமும் பதவியும்
64. போற்றி யென்றுனை
65. காலம் காலமாய்
66. எங்கும் கண்டிலம்
67. புவனம் யாவையும்
68. பெற்றவள் நீயே
69. மக்களோடு
70. அம்மை என்றும்
71. கங்கை யானவள்
72. சுத்தியான சிந்தையும்
73. கிட்ட நின்றவர்
74. நின்று போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. வாலி சூரி
76. நம் உயிர்த்துணை
77. வேப்ப நீழலில்
78. வேள முகத்தானை
79. ஐவர் எங்களை
80. சோதியாக
81. கற்கும் கல்வி
82. நாரணி உமை
83. வாழ வந்தோம்
84. நாடி வந்தவர்
85. அல்லல் பட்டவர்
86. அரனின் பாகம்
87. உருகும் அடியரை
88. தஞ்சம் நீரென
89. உண்மை நோக்கும்
90. பதியின் பாகம்
91. பலவித பரிமள
92. உற்றுணர்ந்தவர்
93. கண்டு போற்றிட
94. தக்கன் வேள்வியில்
95. ஞாலம் வாழ
96. மாயக் கடலிடை
97. எங்கு நோக்கினும்
98. சைவம் குன்றி
99. மண்ணில் தோன்றிய
100. வாழும் போது
101. வீதியில் நிற்பரை
102. சேர உமதடியினை
103. மறைமிக ஓதி
104. அன்பினில் உமது
105. வேதம் ஓதிடும்
106. பத்தும் பெற்ற
107. எண் குணம்
108. வீணை மீட்டி
109. நட்ட கல்லினை
110. பக்கம் வந்தெ
111. ஊரும் பேரும்
112. கலைகள் ஆடி
113. பாடி யேத்த
114. நித்தம் உம்மை
115. வாடிய எங்களை
116. சிந்தித்த எங்களை
117. ஆடி ஓடி
118. அன்பு காட்டி
119. நற்றவர் தொழ
120. நெஞ்சில் வந்து
121. கூடும் உம்
122. எண்ணி எண்ணி
123. உம்மைக் கண்டால்
124. அந்தணர்
125. அருள் புரிகளை
126. வாடினோர்களை
127. பவள மேனியும்
128. ஆலமரத்தடி
129. முன்பு நீ கண்ட
130. எண்ணினோர்களை
131. வாடினோர்களை
132. அன்பினால் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133. நாக படத்தோடு
134. கூடிப் பக்தர்கள்
135. அரகடகனை
136. வட்டமாகிய
137. விந்தையாக
138. பைந்தலைக்கு
139. வரம் மிக ஊனென
140. எள்ளினுள் என்னை
141. திருந்திய உடம்
142. பஞ்ச பூதங்களால்
143. தொழுதிடு கை
144. உமதருள்
145. மண்ணில்
146. குற்றம் அற்றவர்
147. பாடும் ஓசையும்
148. கானம் பாடுவர்
149. அம்மாவைத் தேடி
150. உடம்பு எம
151. செம்மையான
152. வீடு தோறும்
153. தேக்கு நீரென
154. நாகம் போற்றும்
156. அரன் அருகிருக்கும்
157. பஞ்ச பாணி
158. அரவணியாக
159. தேரில் உம்மை
160. அஞ்சினால் உருவ
161. நாக பூஷணி
162. பவள முத்து
163. சித்தி முத்து
164. நாக முத்து
165. பக்தி முத்து
166. உலக முத்து
167. நாளும் முத்து
168. தங்க முத்து
169. கண்களாலே
170. மாற்றமிலாது
171. யூழியாக
172. ஊருளோர்கள்
173. நாக முத்து
174. மலையில் முத்து
175. கோல முத்து
176. கல்லில் முத்து
177. பாச முத்து
178. அல்லல் தன்னை
179. நித்தம் வந்து
180. காஞ்சி முத்து
181. பாக முத்து
182. நீல வண்ணனின்
183. இங்கும் அங்கும்
184. உருவத்துள்ளே
185. பாதம் நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கணபதி காப்பு

ஐந்து கரத்தானை முகன் உருவமாகி
அகர முதலெழுத் தெல்லாம் அவனேயாகி
வந்தனைக்கு முன்நோய் வலமதாகி
வந்தலைக்கும் விக்கினங்கள் தீர்ப்பானாகி
முந்து நம்பி உவந்தளித்த அமுதம் உண்டு
முதுமறையின் மறைவிடத்தை முன்னே காட்டும்
தொந்தி மதக்கரிக் களிற்றை தொழுது போற்றி
தொடரவரும் துன்பத்தின் தொடக்கறுப்பாம்.

### சிவன் துதி

தந்தை இல்லதோர் தனியனானவன்
வந்திடும் பிறவியை மாற்றவல்லவன்
நொந்திடும் உயிர்களை உற்று நோக்கிடும்
எந்தை தன் இணையடி இறைஞ்சி ஏத்துவாம்.

### அம்பிகை துதி

அன்னையும் ஆனவள் அகிலம் ஆனவள்
தன்னையும் தாயென தரணி போற்றிட
பின்னையும் வரும் பெரும் பிறவி மாற்றுவாள்
சென்னியில் கரமொடு சேர்த்திறைஞ்சுவாம்.

### முருகன் துதி

உறுவினைப் பயனினுள் உடம்பெடுத்திட
பெறுமுயிர் அனைத்தையும் பிறவி வேரற
செறுமுயிர் யாவையும் சிறக்க வைத்திடும்
அறுமுகன் இணையடி அகத்திருத்துவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

பூவுலகனைத்தையும் படைக்கும் நான்முகன்
தேவியங்கமல மேல் சிறந்திருந்திடும்
நாவு தோறிருந்துடன் நலமளித்திடும்
சேவடி சிரமிசை சேர்த்து வாழ்த்துவாம்.

## இலக்குமி துதி

பாற்கடல் துயில்பவன் பாகமானவள்
நேரிடை உயிர்களை நிலைத்து வாழ்வுற
சீரிடை செல்வமும் சிறப்பும் கீர்த்தியும்
பாரிடைத் தந்தவள் பாதம் போற்றுவாம்.

## நவலெட்சுமி துதி

1. பேறுதருவாள் பாக்கிய லெட்சுமி.
2. பெருமை தருவாள் விஷய லெட்சுமி.
3. தேடி வருவாள் சைவ சௌபாக்கிய லெட்சுமி.
4. சிந்தையில் இருப்பாள வரத லெட்சுமி.
5. செல்வம் தருவாள் அன்ன லெட்சுமி.
6. கீர்த்தி தருவாள் அஸ்ட லெட்சுமி
7. வீறு தருவாள் வீர லெட்சுமி.
8. கூற வருவாள் சம்பன்ன லெட்சுமி.
9. கருணை புரிவாள் கஜ லெட்சமி.

கடைத் தேற கழல் கற்பணிவோம்.

## சம்பந்தர்

பாலறா வாயா போற்றிபரை தரும் அமுதே போற்றி,
சீலனே போற்றி, காளித்திருப்பதி அளித்த போற்றி,
ஞாலம் உள்ளளவும் பாட நல்மறை தந்தாய் போற்றி,
கோலனே போற்றி, ஞானக் கொழுந்தனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அப்பர்

பாவினைப் பாடி நிற்க பரவசமாகிஐயன்
நாவினுக் கரையன் என்றே நற்பெயர் சூட்டி அங்குச்
சேவடிப் பரிசையாக திருவடி சிரசில் வைத்த
பூவடிப் புனிதனாரின் பொன்னடி போற்றல் செய்வோம்.

சொற்திருத் தாண்டகமும் தொடர் அந்தாதியும்
நற்பத விருத்தமும் நகில் முத்துப் பாடலும்
பற்பல பத்தியாய் பாடி பயன் பெற்றிட
கற்பனை யற்றவள் கழல்கள் போற்றுவாம்.

### சுந்தரர்

ஆவணம் காட்டி ஆட்கொண்ட சுந்தரன்
பூவண நல்லூரர் சென்று போற்றிய புனிதன்
பாவணம் பாடி யேத்தி பல்லுயிர் வாழவைத்த
தீவணச் சிவன் பின் சென்ற சேவடிக்கமலம்
போற்றி.

### மாணிக்கவாசகர்

திருப்பெரும் துறையிலே
சிவனையே தொண்டனாக்கி
உருப்பெறு செயலைச் செய்து
உருகிட பதிகம் பாடி
விருப்பொடு வேந்தன் காண
நரிகளைப் பரிகளாக்கி
அருந்திய வாதவூரர் தாள் அடிவமுத்தி வாழ்வாம்.
ஞான சம்பந்தா போற்றி
நாவினுக் கரசே போற்றி
தோழச் சுந்தரனே போற்றி
துலங்கு மாணிக்கா போற்றி
நால்வரின் பாதம் போற்றி
நான்மறை போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

**நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதபிள்ளை அவர்கள்.**

பெருகிடும் பக்தி வாழ்வழி ஊற்றென வருவது
அம்பிகை வழங்கிய கொடையே.

1 இனிய செந்திமிழ் புலமை மிக்கவர்
கனியு மன்பினில் கற்ற நலத்தினர்
மனித மாண்பினில் மகிழ்ந்திருப்பவர்
புனித நயினையின் புதல்வராவரே.

2. இந்த நலமெலாம் நாகபூஷணி
தந்த அருட்கொடை அன்றி, வேறிலை
அந்த அருளிலே ஊறித்திளைத்தவர்
முந்து அருணாசல மெனு மன்பரே.

3. தந்தை தியாகர் தாமும் தமயனார்
முந்து நாகமணிப் புல வோனுமாய்
சிந்தை கனியும் செந்தமிழ் பாடல்கள்
தந்த சிறப்பினில் தனித்துவமானார்.

4. அன்னை நாகபூஷணி மாண்பெலாம்
கன்ன லொத்த கவிதையில் தந்தவர்
பின்னவர் வந்த பேறு இவர் குணம்
தென்னில் என்ன அதிசயமாகுமோ.

5. சொல்லும் பொருளும் என நடமாடுமே
வல்ல நாகபூஷணி அருள் வளம்
கல்லும் கனியும் கனிவளம் பெருகிட
அல்லல் தீர்த்திட அள்ளித் தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எதுகை மோனைகள் ஏவலாய் வந்திட
அதுகை ப்பட்டிட அடுக்கடுக் காகிட
மதுவைக் கொண்டவர் வெறியெனப்புலமையாய்ப்
புதுவைப்புடனுடன் பூரணிக் காக்கிறார்.

7. அருளெனும் அமுதினை அம்பிகை ஊட்டவும்
உருகியே உண்டனர் போலும் அருணனார்
பெருகிடும் பக்தி வாழ்வழி ஊற்றென
வருவது அம்பிகை வளளாகிய கொடையலோ -வேறு

8. விருத்தம் அந்தாதி தாண்டகம் என்று பல பாடல்
முத்துப் பாட்டு
பொருத்தம் மிக்க தாய் புனைந்த பொருள் மிக்க புதையல்
கருத்தும் கனிவும் கடாட்டிடும் கதித் தெள நிற்றல்
குருத்தும் கிழையுமுடன் குளிரூட்டுகின்றதோ.

**அம்பிகை சொற்பனத் தாண்டகம்**

ஆக்கம்:
தியாகர் அருணாசலம் - அம்பிகை அடியான் நயினை.

**அவையடக்கம்.**

உற்றெழும் உணர்வினால் அடியேன் புலம்பிய
சொற் சுவை பொருள் சுவை அற்ற இப்பாக்களை
கற்றவர் பார்த்து கருத் தெடுக்காமல்
பெற்றவள் அருளால் பிழை களைவீரே.

**சொற்பனத் தாண்டகம் அம்பிகை.**

1. கணபதியும் சண்முகனும் அன்னையோடு
களித்திருந்து கலகலெனப் பேசக் கண்டேன்
அனைத்திலங்கு கங்கை யொடு மதியும் கண்டேன்
ஆடரவம் அசை போட்டு உளரக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணைப்புடனே பரமனொரு ஏறு கண்டேன்
புவியனைத்தும் போந்து வந்திருக்கை கண்டேன்
இணைப்புடைய மான் முழுவதும் இலங்கக் கண்டேன்
எழில் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

2. கடல் நடுவே வரும் அடியார் கலங்கக் கண்டேன்
கைமேலே பலன் அளித்தவாறு கண்டேன்
உடல் வருந்தி உன் அடியில் சேரக் கண்டேன்
ஒருநாளும் காணாத காட்சி கண்டேன்
மடல் விரித்த கோலத்தை மனதாற் கண்டேன்
மாறாத பக்தியுளார் வருகை கண்டேன்
இடர் கெடுக்கும் பேதம் எழிதிற் கண்டேன்
எழில் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

3. பப்பரவன் சல்லி பகலே கண்டேன்
பருமணலிற் படுக்கையிலே இருக்கக் கண்டேன்
இப்பரத்தில் ஏரியுருவாய் நிற்கக் கண்டேன்
ஏறு மயில் ஏறி உடன் இறங்கக் கண்டேன்
எப்பரவும் அடியார்க்கு இரங்கக் கண்டேன்
எம்பிரான் பாகமதாய் ஏறே கண்டேன்
இப்புவியில் காணாதவாறு கண்டேன்
எழில் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

4. பொட்டிட்ட திருநுதலும் பொலியக் கண்டேன்
பொன் போன்ற திருமேனி முழுதும் கண்டேன்
கட்டிட்டம் களைவித்த முறையைக் கண்டேன்
கசியாதார்க் கெளிதாகாவாறு கண்டேன்
மட்டில்லாக் கருணை தரு முகத்தைக் கண்டேன்
பட்டில்லாக் கரியுரியை உடுக்கக் கண்டேன்
பார் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆலவாய் அமர்ந்திருக்கும் அழகைக் கண்டேன்
அஞ்சனமும் சாந்தும் அணியக் கண்டேன்
கோலமாய் பவனி தரும் தேரைக் கண்டேன்
குளிர் மலரும் நறும் புகையும் வீசக் கண்டேன்
காலமெலாம் ஒன்றாகி மிளிரக் கண்டேன்
கடிகமல பூங்கழல்கள் நடக்கக் கண்டேன்
ஞாலமாய் நயினையிலே கயிலை கண்டேன்
நகர் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

6. தில்லைப் பிடாரியிடம் செல்லக் கண்டேன்
திரும்பி வரக் காணாது திகைக்கக் கண்டேன்
சொல்லத் தெரியாத சொரூபம் கண்டேன்
தொண்டரொடு கூடி நின்று தோன்றக் கண்டேன்
எல்லைக்குள் எம்முடன் வருதல் கண்டேன்
எவ்வுருவம் சென்றதினால் இளைத்தல் கண்டேன்
தொல்லைக்குட் போகாத துணையும் கண்டேன்
தொடர் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

7. மதலையாய் வருஞான சம்பந்தர்க்கு
மாதாவாய்ப் பால் கொடுத்த உருவம் கண்டேன்
குதலையாய் தேவாரம் பாடக் கண்டேன்
கொடு கொட்டி தாளம் இசைக்கக் கண்டேன்
முதலையாய்க் கயிலாயத் தடியில் கண்டேன்
மூர்க்கனாம் ராவணனைச் சுட்டல் கண்டேன்
பதலையாய் திரிவேணை பார்க்கக் கண்டேன்
பார் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

8. எல்லாரும் உன் நாமம் இயம்பக் கண்டேன்
என் தாயே என்பார்கள் எதிரில் கண்டேன்
சொல்லாரும் மறை வல்லார் துதிக்கக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிக்கையும் சுடர் வேலும் தோன்றக் கண்டேன்
வல்லாராய் வானவர்கள் வணங்கக் கண்டேன்
மறை நான்கும் ஓதிடும் ஆர்ப்பைக் கண்டேன்
நல்லார்கள் நவின்றேத்தும் பாதம் கண்டேன்
நகர் நயினை ஈஸ்ரியைக் கண்டவாறே.

9. தக்கனுடைய பெருவேள்வி தகர்ந்தபோது
சதாசிவனைப் பிரியாத பாகம் கண்டேன்
ஒக்கவே இராவணனை ஊன்றும் போது
உமையவளே பரிந்திட்டவாறு கண்டேன்
தொக்கவே அடியார்கள் பாடியாட
சுடர் நடுவே சோதியாய் மின்னக் கண்டேன்
மிக்கவே நஞ்சுண்ண தடுத்தல் கண்டேன்
மிளிர் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

10. செம்பவளத் தோள் தேரில் கண்டேன்
திருத்தொண்டர் தம்மோடு சிரிக்கக் கண்டேன்
அம்பவளத் துருவான செவ்வாய் கண்டேன்
அரிபயனும் காணாத உருவைக் கண்டேன்
தம்நுதல் நற்திருநீறு சாத்தக் கண்டேன்
எம்பந்தம் அறுக்க வரும் இயற்கை கண்டேன்
எழில் நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

11. பல்கணமும், பூதமும், படையும், பாம்பும், பாய்புனலும்
தண்மதியும் சேர்ந்து கண்டேன்
வெண்முகிலும் பாதாளம் ஏழும் கண்டேன்
வெற்றி வேல் பிள்ளை தனியே கண்டேன்
நற்காஞ்சி மான கரில் நாதற்காக நாள் வருந்தித் தவம்
இருந்த நிலையைக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை காண்பரியானின் பாகத் தாளை எழில்
நயினை ஈஸ்வரியைக் கண்டவாறே.

12. ஏழுலகும் தொழுதேத்தும் இறைவி கண்டாய்
என் உள்ளத்துள்ளே இருப்பாய் கண்டாய்
பானு தலையானின் பாதி கண்டாய்
பகலிரவாய் முறையாக வருவான் கண்டாய்
நாளுமுனையே தொழுதுருகும் அடியார் தங்கள்
நலமனமே நீ கண்டாய்
நம்பர் பாகம் சூழும் உனதுருச் சொல்லே கண்டாய்
தொல் நயினை ஈஸ்வரியைக் கண்டேன் கண்டாய்.

13. சூரனுடல் தகர்த்திட நீ துர்க்கையாகிச் சுடர்
வாளை எடுத்திட்டெறிந்த நாளோ
வீரனாம் முருகனையும் பயந்த நாளோ
வெவ் வழலாய் மேல் கீழாய் நின்ற நாளோ
பாரமாய் பரன் பாகத் தமர்ந்த நாளோ
படர் கங்கை திறாச் சடையுள் புகுந்த நாளோ
தீரமிகு ஐயனுக்கு முன்னோ பின்னோ
திகழ் நயினை கோயிலாய் கொண்ட நாளோ.

**வேறு**

14. கருவாய் வயிற்றகத்தே நின்றாய் நீயே
காணாத வாறருளே புரிந்தாய் நீயே
உருவாகி வந்தவுடன் ஒளித்தாய் நீயே
ஒளி நயினை மேவி இருந்தாய் நீயே
மருவாகி மறுபடியும் மனத்தினுள்ளே
மாசகற்ற உட்சென்ற உயிரும் நீயே
தெருவாகத் திரிவோனைப் படைத்தாய் நீயே
செழு நயினை அகலாத செம்பொற் சோதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. வளர் நயினை மேவினாய் என்றேன் நானே
வல்லார்கள் வணங்குவார் என்றேன் நானே
கிளர் அரவம் உன் நாமம் என்றேன் நானே
கின்னரர்கள் என் பக்கம் என்றேன் நானே
சுழல் தேரில் கிண்கிண் என மணி ஒலிப்ப
கீதமோடு செவ்வாயே என்றேன் நானே
தளர் வுடையார் துயர் தீர்ப்பாய் என்றேன் நானே
என்றென்றே நானரன்றி நைகின்றேனே.

16. வினையே விளைவே விளைவின் பயனே
வித்தே உருவானாய்
தனையே வேண்டி வரும் உன் அடியார்
தஞ்சம் நீயன்றோ
உனையே தொழுது உயரும் பக்தர்
உளமே நிறைவாகி
தினையோர் பொழுதும் திகழும்
வடிவம் செகமேல் நீயன்றோ.

## அம்பிகை அந்தாதி

1. கண்ணே மணியே கனியே ஒளியே கருணை வடிவே என்
எண்ணே எழுத்தே இருப்பே விருப்பே இன்பம்
என்போமே
பண்ணே இசைத்துன் நாமம் பயிலும் அடியார் பலர் முன்னே
விண்ணே அதிரவிரவிவரும் உன் வேடம் பலவன்றோ.

2 விரவிவரவேபரவும் அடியார் வேதம் பல ஓதி
நிரவிவரும் உன் அருளும் அன்பும் நினைக்க எழிதாமோ
பரவிப் பணிந்து பாதம் தொழுது பாகாய் உருகாமே
இரவும் பகலும் இன்பம் காண எங்கோ சென்றோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எங்கே சென்றும் எதையும் காணா திருந்தோம் பல காலம்
அங்கே சென்றால் அவலம் தீரும் எனநின்றயர்த்தோமே
தெங்கே தோன்றும் குன்றம் நயினை தனையே தினம் ஏத்த
இங்கே வந்தால் எல்லை காணா தருளைக் காண்போமே.

4. அருளைக் கண்டு பொருளைக் கண்டோம் அறிவை வளர்த்தோமே
இருளைப் போக வழியைக் கண்டோம் இடரை மறந்தோமே
மருளைத் தீராய் வரவைத் தாராய் மதியே விதியே எம்
இருளைக் களைவாய் நயினைப் பதியே உறைவாய் செகமாதா.

5. மாதா என்றும் மலரே என்றும் மறவா மனத்தோடே
நீ தான் உருவம் நீ தான் நிருவம் நீ தான் துணை என்றே
ஓ தா கீதம் தா தா என்றே உருகும் அடியார்கள்
பாதா பாதம் பணியும் படியாய் பரந்து நின்றாயே.

6. பணியும் பத்தர் மனமே பண்பே பரனார் பாகமே
பிணியே தீர்க்கும் திருவே பேசப் போகும் வினையன்றோ
மணியே தேரில் ஒலிக்கும் தோறும் மலரும் முகமன்றோ
அணியே நயினைப் பதியே கருத அகலும் பினை தானே.

07 திகழும் வடிவே ஜெகதீஸ்வரி தேனே தெள்ளமுதே
புகழும் படியுன் முடியும் அடியும் பொருத நின்றாயே
இகழும் அடியார்க்கின்னல் கொடுப்பாய் ஏத்தா விரும்பாயே
நிகழும் வலியை துகள் அடிப்பாய் நெஞ்சம் நிறைந்தாயே.

08 நெஞ்சத்துறையும் நீலி சூலி நித்ய கல்யாணி
வஞ்சப்புலனை வெல்லும் படிக்கு வாழ்வைத் தருவாயே
அஞ்சொல் பயிலும் அடியாரோடு அடியேன் ஒருகூடி
நிஞ்சித்தேனும் எண்ணும் படிக்கு உன்கீதம் பாடேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09 கீதம் பாடும் அடியார் ஒரு பால் கிண்கிணி ஓசையுடன்
வேதம் ஓதும் அந்தணர் ஒருபால் விலகாதோடிவரும்
தேரில் இளைத்த மணியும் அசைய சிரிக்கும் முகமன்றோ
ஓதும்படிக் கெம் உள்ளே இருந்து ஒசை கொடுப்பாயே.

10 உள்ளே இருந்து கள்ளம் அறுக்கும் உருவே பரையோகி
தெள்ளே தெளியும் வெள்ளே என்றும் விமலன் ஒரு பாதி
நள்ளார் நாளும் பரவும் நயினைப் பதியை தொழுது ஏத்த
கள்ளார் காணும் படிக்குன் அருளைக் காணத் தருவாயே.

11 அருளே தருவாய் நயினைப் பதிவாழ் அமுதே அடியார்கள்
மருளை நீக்கி வாழ்வைத் தருவாய் வழியைக் காட்டாய் நீ
இருளைப் போக எனை உன் நாமம் இயம்ப வைத்தாயே
தெருளைத் தீர்க்கும் வினையைப் போக்கும் திருப்பிணி தானே.

12 தீரா வினைகள் போரா நோய்கள் செய்யும் வஞ்சனைகள்
நேரா வண்ணம் நிலையைத் தருவாய் நீங்காதருள்வாயே
ஓராதாரும் உணரத்தக்க உருவம் உடையாய் நீ
நீராய் நிறைந்த கடலின் நடுவே நிலவும் சுடரன்றோ.

13 நலிவும் அன்பும் நீரும் புகழும் நிலனும் விண்ணுலகும்
பலவும் புகழும் பண்பும் பயனும் பகலும் இரவாகி
உலவும் மதியும் உதிரும் கங்கை ஒன்றாய் நில மீதில்
இலகம் படிக்கெம் எதிரில் அடியார் ஏத்த நிற்பாயே.

14 அடியார் கூடில் அன்றே முகமும் அன்பாய்மாறிவிடும்
முடியும் மிளிரும் மின்னும் பணியும் கண்ணில் பதிவாகி
இடியும் அன்பர்க் இடர்கள் களைய இருக்கும் எம் தாயே
குடியும் குணமும் பொருளும் பொறையும் கொடுப்பாய்
கொற்றவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 கொடுப்பாய் புவியில் கொள்ளும் வாழ்வைக் கோணா
தளிப்பாயே
மடுப்பாயாகில் வறியோம் மண்ணில் வாழத் தகுமாமோ
வடுப்பாய் பாதம் பணிய மலரால் அர்ச்சித்துன் பாதம்
அடுப்பாயாகில் அதுவே போதும் அடியோம் மறவோமே.

16 மறவோம் அம்மா மாதா தாயே மங்கள நயினை நகர்
பிறவே ஊரை வேண்டாதிங்கே பித்தார்க் கெளியானாய்
துறவே பூணும் அடியாரோடு தொடர்பாய் நிற்பாயே
அறவே மறவோம் அடியோம் ஒருகால் அபயம் புகுவோமோ.

17 அபயம் தருவாய் அயரா துணர்ந்துன் அடியில் வந்தேனை
பயமே நீக்கி பாவம் போக்கி பயனைத் தருவாயே
கயவேன் உள்ளே கள்ளம் நிறைந்து காலம் கடந்தேனே
பயமே நீக்கி பாவம் போக்கி பயனைத் தருவாயே.

18 உய்ய தருவாய் நைய நினைந்துன்றுள நின்றடியாரோடு
ஐயத் தலைப்பட்டடியேன் மறுகி அயர்த்தேன் அறியேனே
வையத்துள்ளே வாக்கு பண்ணி வாழ வழியில்லேன்
செய்யத் தகுமோ இன்மைப் பொருளே சிறுமைக்குரியேனே.

19 சிறுமையானேன் பெரியனல்லேன் சிறியேன் உளமாகி
வறுமை தீர வந்து குதியாய் மார்க்கம் காணேனே
பொறுமை இழந்து புலம்புகின்ற பெரிய அடியார்களே
மறுமையடையும் வழியாய் நயினை மருவி நின்றாயே.

20 மருவி நின்று வானோருக்கும் மண்ணுலகோருக்கும்
உருவி நின்ற வேலோன் குமரன் உன் கண்மணியன்றோ
திருவிலாதலங்கா அரசன் கயிலை அசைத்தாட்ட
குரவி ஓடி குமரன் தாதைக்குணர்த்தி நின்றாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 நின்றால் நயினை ஒன்றாய் மிளிர நிரவி அடியார்கள்
குன்றாதுருகி அருவி பாய குவிந்துன் கழல் பாடி
நன்றாய்த் தேரில் நாலா புறமும் நல்லிசை ஒலிகளுடன்
சென்றாய் என்றால் சீரும் சிறப்பும் செப்ப எழிதாமோ.

22 செப்ப மாட்டேன் செயலனுமல்லேன் திருத்த மாட்டேனே
ஒப்ப மாடடேன் உன் அடியாரோடுருகிப் பணியேனே
தப்ப மாட் டே ன் வினைகளை அகற்ற தறியேன் ஒன்றறியேன்
அப்பன் நீயே அம்மை நீயே அன்புக் கனி நீயே.

23 அம்மை நீயே அதிபதி நீயே அமரற்கனி நீயே
செம்மை நீயே செகமும் நீயே செயலும் நீ தானே
வெம்மை நீயே தண்மை நீயே வேதம் நீ தானே
இம்மை தாய் நீ தானே.

### வேறு விருத்தம்

24 மலைமகளானாய் மலைகளுமானாய் மாயவன்
தங்கையுமானாய்
கலைகளுமானாய் செல்வமுமானாய் காரணம் நீயேன
ஆனாய்
தொலைவிலா அன்பு பக்தியும் ஊட்டி துன்பெலாம்
போக்கியே எம்மை
நிலை பெறவைத்து நீடருள் புரிபவள் நீயே.

25. உயிரெலாம் உய்ய கமலமேல் உதித்தாய் உன்னையே
தாயென செய்தாய்
பயிரினை வளர்க்கும் மழையினைப் போலே பசியையம்
போக்கிட செய்தாய்
கசிவினை மனத்துள் புகுத்தி வைத்திட்டாய்
கண்ணீராய் வடியவும் செய்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிசியிலும் கனவாய் வந்து நினதருள் காட்டும்
நெறியினை நினைப்பதும் எழிதோ.

26 உலகினைப் படைத்து உயிர்களை அளித்து ஒருவனே
தாயுமேயாகி
அகிலா அண்டம் யாவையும் காத்து அதற்கொரு
தலைவியுமாகி
நிலவிடும் கல்வி செல்வம் சீர் பெருமை நிறைவுடன் தந்து
அருள் கொடுக்கும்
பலமிகவுடைய அருளினைப் புகுத்தி பரகதியடையவும்
வைத்தீர்.

27. கோயிலை அமைத்து கொள்கையை வகுத்து கும்பிட
உருவமுமமைத்து
தாயிலும் இனிய தயவுடன் காத்து தத்துவம் புகட்டினீர்
புவியில்
நோயினில் வாடும் நலிவினைப் போக்க நுவலரும் கருணை
நல்கி
நீயது செய்ய நினைந்துளம் உருகி நிலை கொள வைத்ததும்
நீயே,

28 ஓசைகள் கொடுத்து உடம்பினைப் படைத்து உள்ளத்தில்
ஒளியினை ஏற்றி
பூசையும் புரியும் முறையையும் காட்டி புவியினில்
வாழ்வைக் காட்டி
ஆசைகள் அகற்றி அருமறை அமைத்து அகிலமும்
அனுதினம் போற்ற
நப்பாசைகள் அகன்று பரகதியடையும் வழியையும்
காட்டினீர் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 பாரதில் கலையும் செல்வமும் வளமும் பதவியும் தந்தவள் நீயே
சீரதாய் சக்தி ஒன்பதுமாகி சிவனிடப் பாகமுமாகி
பேரதாய் கங்கை பிறையோடு அரவம் மழுவனல் கையதுமாகி
நீரதாய் நின்று நீடருள் புரியும் நிகழ்வினை எங்ஙனம் புகழ்வோம்

30 நாற்றிசை வேலை சூழ்ந்த நன்நகர் நயினை தன்னில்
வீற்றிருந்தருள் கொடுக்கும் பேர் அராப் பேரைப் பெற்ற
போற்றிடும் அடியார்க் கெல்லாம் பொன் முகம் காட்டி நிற்கும்
தோற்றமே எங்கட் கெல்லாம் துலங்கிட அருள் செய்வாயே.

31 நற்பதியிது தானென்று நாடியே வருவோர்க் கெல்லாம்
சொற்பதித் திருகை யேந்தி தூய கண்ணீரைச் சிந்தி
நிற்கும் நின் அடியார்க் கெல்லாம் நீடருள் கொடுப்பாள் தாயே
பற்பல வேடம் தாங்கும் பகவதி நீ தானன்றோ.

32 கண்ணீரைச் சிந்தி நின்று கலங்கிடும் பக்தர்க்கெல்லாம்
தண்ணீரை தாண்டி வந்தோம் அபயம் என்றளித்து நீயே
மண் மீதில் தோன்றி நிற்கும் மறைபடும் உயிர்கட் கெல்லாம்
விண் மீதில் இடம் அளித்து வேதனை தீர்ப்பாய் தாயே.

33 உத்தமி உலகாள் வித்தகி எங்கட் குறு பிணி தீர்த்திடும் உமையே
பத்தரை மாற்று படிவமும் நீயே பரமனார் பாகமும் நீயே
சக்தியும் நீயே சஞ்சலம் நீயே தயா மூல தர்மமும் நீயே
புத்தியும் நீயே புவனமும் நீயே புரள் கடல் நடுவினில் நின்றாயே.

34 தலைவியே தவமே தர்மமே தூய தண்மையே சாந்தியே சாரும்
நிலையமே நயினை உறைபதியாக நிர்த்தனம் ஆடிடும் நிமலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைவியே உமையே வானவர் துணையே வடிவமே வள்ளலே
அமையவே
வலயமே வைத்த வழ்க்கை தவிராய் வயர் நயினாபதி மணியே.

35 எல்லையில்லாத அளவிலாய் வெள்ளை ஏறுகள் தேறுவாய்
பரனோடு
இல்லை யென்றாது மின்னுவாய் எழியோர்க் கிரங்குவாய்
எம் இடர் தீர்ப்பாய்
தொல்லையாம் வாழ்வில் தோற்றுவாய் தோற்றி ஏற்றுவாய்
போற்ற நீ விடுப்பாய்
முல்லையே கமழும் முகிழ் மலர்க் கூந்தல் மொட்டறா
நயினை ஈஸ்வரியே.

36 மொட்டிடை மலர்ந்த நறுமலர்க் கூந்தல் முகிழ் நகை செறி
தருமுகமே
கட்டிலா தோடும் கடலிடை அமர்ந்த கனகமே கற்பகத்
தருவே
மட்டிலாதுருகும் உன் அடியார்க்கு மலரடி காட்டிடும் வண்ணம்
தொட்டிலை ஆட்டிடும் தாயினை நிகர்த்த தோணியும்
ஆகினாய் நீயே.

37 புண்ணியம் மிக்க கண்ணியம் நிறைந்த பொலிவுறு
நயினைம் பதியை
எண்ணிடில் இன்பம் இருந்திடில் ஏற்றம் இசைத்திடில்
இதயமும் ஒன்ற
பண்ணிய தவமும் பலித்திடும் நெஞ்சில் பதிந்திடும் பார்வதி
முகமும்
நண்ணிடில் வீடாம் நயந்திடில் பேறாம் நலிவினை
அகற்றும் இப்பதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகை குறுவிருத்தம்

38. நாகபூசணி நம்பினவர்க் கருள்
நாகபூஷணி நாளும் நமக்கருள்
நாகபூஷணி நம்மை ஆண்டருள்
நாகபூஷணி பாதம் நவிற்றவே.

39. நம்மை பெற்றவள் நாகபூஷணி
நம்மை வளர்த்தவள் நாகபூஷணி
நம்மை காப்பவள் நாகபூஷணி
நம்மைக் கண்டு நமக்கருள் செய்வாளே.

40. சுற்று முற்றும் துவளும் அலை இசை
கற்ற அந்தணர் காட்டும் மறை இசை
பற்று வைத்தவர் பாடும் பண்ணிசை
பெற்று நின்ற பெரும் பரமேட்டியே.

41. பாதம் நாளும் பணியப் பெறுவரேல்
ஓதும் கீதம் உவந்து இசைப்பரேல்
சூது வாது துன்பம் களைவரே
யாதும் நீயென நம்பிடுவார்களே.

42. எண்பத்திரெட்டும் இயங்கு மனோன்மணி
புண்பட்டும் மிடம் வந்து விட்டோமினி
கண்பட்டும்மை கண்டு கொண்டோமினி
மண்பட்டிங்கு மடியவும் வல்லமே.

43. சாவதற் கென்றே தங்குமுடம்பிது
போவதற் கொரு போக்கிடமில்லையே
மேவி நிற்கும் உயிரது போயினி
தாவி உம்மை தேடி வந்தெய்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. சித்தி நருவாள் சேர்ந்தவர் கெலாம்
பக்தி கொண்டவர் தங்களை நோக்குவாள்
வித்துப் போட்ட விளை நிலம் போலவே
சித்தியும் பல போகமும் தருவாளே.

45. அண்டி னோர்க் கபயம் தருபவள்
மண்டி இட்டவர் மாசு துடைப்பவள்
மிண்டி வந்தவர் வேதனை தீர்ப்பவள்
கண்டு நாள் தொறும் கணீணீர் சொரியவே.

46. வேதம் ஓதுவர் வேதியர் அந்தணர்
பாதம் போற்றுவர் பக்தி கொண்டோரெலாம்
கீதம் பாடுவர் கின்னரம் முரசொலி
நாதம் எங்கும் நாற்புறம் கேட்குமே.

47. வெந்த நீறுடன் வெள்ளெருக்கமலர்
எந்த நாளும் பொற்சுண்ணம் இன்னிசை
கந்த நானும் கழலடி காண்பதற்கு
பந்த பாசம் விட்டுன்னடி காண்பரே.

48. பாரும் விண்ணும் பரந்துமை நாடியே
சீரும் செல்வமும் திருவும் தருவென
ஊரும் பார்த்திட ஓடத்திலேறியே
காரும் மண்டிய கடலினை தாண்டுவர்.

49. மண் பொருந்தி வாழ்பவரக் கெலாம்
விண் பொருந்தி வேதியர் கெலாம்
எண்பொருந்திய இன்னலுற்றோர் கெலாம்
கண் கசிந்திட காட்சி கொடுப்பீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50 பக்தியால் உமை பாடி துதித்திட
சித்தி தாவென தேம்பி அழுதிட
புத்தியாலுனை போற்றி அழைத்திட
முத்தி தந்து மிடியினை போக்குவாய்.

51. நீல வண்ணனின் நேரிளை மங்கையே
சால நின்னடி நாடி வந்தோம் இங்கு
கோல மேனியும் கோமளப் பார்வையும்
சீலமான திருமுகம் காட்டுமே.

52. சூலினால் வந்து தோன்றி இடருனே
பாலில் நெய் கலந்தாலது போலவே
நாலிரண்டு குணத்தொடு நாடியே
ஏலுமாறு இரங்கி துதிப்பமே.

53. உற்றபேர் தம் உள்ளம் குளிரவே
கற்ற பேர்கள் கதறும் அடியவர்
சுற்றம் விட்டு துணையில் மென்றுமை
பற்று வைத்தவர் பணிந்திடுவார்களே.

54. நாகயீஸ்வரி என்றுனை நாடுவார்
போக மானதை நீக்கி வந்தெய்துவார்
ஏகமான நின் பாதம் பணிந்திட
தாகமாய் வந்து தாளினைக் காண்பீரே.

55. பக்தி மேலிட பாடி துதிப்பரே
புத்தி மேலிட புலம்பி அழுவரே
சக்தி நீயென தரையில் விழுவரே
எத்திசைக்கு மிலங்கு மெம் அம்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. வந்து நித்தம் வணங்கிடுவோர்க் கெலாம்
நொந்து வந்து துவன்றிடுவவோர்க் கெலாம்
ஐந்து பைந்தலைப் பாம்பதிலேறியே
முந்து கண்ணுற நோக்கும் பிராட்டியே.

57. தக்க மாந்தர்கள் வாழும் பூமியில்
மிக்க வேள்விகள் செய்து வணங்கவே
பக்கமாக பரமனிடத்துறை
சொக்க நிற்கும் சொரூபம் தென்கொலோ.

58. நன்று நன்றென நாளும் நவில் பாவர்
சென்று சேர் பவர் போற்றும் திருவடி
என்று நின்று இலங்கு மீஸ்வரி
பொன்று கின்ற உன் பேரெழில் போதுமே.

59. தப்பில்லாது சரணம் என்பவர்க்கு
ஒப்பிலாத உருவதை காட்டுவாள்
செப்பிலாது திருவருள் பார்வையால்
நம்பினோர்களை நயந்தருள் செய்வளே.

60. பருவத்தே பயிர் செய்வது போலவே
உருவத்தே இவ்வுயிர் இருக்கும் வரை
நிருமித்த உடல் நீங்கிடு முன்னமே
அருகி வந்து அருள் புரி அம்மையே.

61. பொக்கமாகிய பொய்யுடல் மெய்யென
மிக்க பார்வையில் மேனி வளர்ந்திட
பக்கம் நின்று பார்க்க நினைந்திலம்
சொக்க நிற்கும் சொரூபம் கண்டிலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. கருவிலே இருந்துன்னடி காண்பதற்
உருவிலே வந்து உன்னை நினைத்திலம்
திருவும் பெற்றிலம் செய் வகை ஒன்றிலம்
பெருகும் நேர்மை ஏதென்றறிகிலம்.

63. பட்டமும் பதவியும் நெடும் பாரிலே
கொட்டும் துன்பமும் கூடவே வந்தன
நட்டம் நலமென நாமிருந்துன்னடி
கிட்டும் வண்ணம் கிளர்ந்தெழுகில்லமே.

64. போற்றி யென்றுனை போற்றிட வந்திட்டோம்.
மாற்றி எங்களை மாண்புடன் வாழ்வை
நாற்றிசையும் நலமுடன் வாழ
கீர்த்தி தந்துதி கழலை அம்மையே.

65. காலம் காலமாய் காலடி பற்றினோம்
கோலம் மாறினும் உன் பொன் முகம் மாறலை
நீலமான நெடுங்கடல் தன்னிலே
பாலமாய் வந்து பரிந்தருள்வீரே.

66. எங்கும் கண்டிலம் உன் முகம் போலவே
தங்கும் பொன்முடி தாமரை தாழையும்
பங்கம் அற்ற பசுங்குளிரப் பார்வையும்
இங்கு நாங்கள் இலங்கிட கண்டமே.

67. புவனம் யாவையும் படைத்தளித்திட்டவள்
பவனமாகி உயிரினில் நின்றவள்
சிவனும் சீவனும் ஒன்றென தோன்றிய
அவனி வந்த அருந்தவ அம்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68 பெற்றவள் நீயே பேணலும் நீயே
உற்றவள் நீயே உரிமையும் நீயே
கற்றவள் நீயே காப்பவள் நீயே
நற்றவளே உமை நாம் மறவோமே.

69. மக்களோடு வந்திடும் சுற்றமும்
தக்கதென்று சலிப்பின்றி வாழ்ந்திட்டோம்
துக்கமான துரயத்தை விட்டினி
பக்கம் வந்துன் பாதத்தில் சேர்வமே.

70. அம்மை என்றும் அம்பிகை நீ என்றும்
நம்மை ஆளும் நாகபூஷணி யென்றும்
எம்மை ஆட்கொள்ள வந்தவள் நீ யென்றும்
செம்மையாக தினமும் துதிப்பமே.

71. கங்கையானவள் கரையில் விட்டிட
மலை மங்கையாளவள் தாவி அணைத்திட
எங்கள் மேனி சிலிர்த்துளம் கண்ணீரால்
பொங்கி பூமி பொலிவுற கண்டமே.

72. சுத்தியான சிந்தையும் தூய்மையும்
புத்தியால் பாத மலர் தொழுது
துத்தி நாகமொடும் மடி கண்டிட
ஏத்தி ஏத்தி இறைஞ்சி நிற்போமே.

73. கிட்ட நின்றவர் நற்கதி பெற்றவர்
எட்ட நின்றவர் கண்டுடன் ஏகினர்
பட்ட வேதனை பரிவுடன் கூறிட
விட்ட யாவையும் மீள அளிப்பளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. நின்று போற்றி நினைத்ததை செய்திட
அன்று போலிலை இன்று எம் வாழ்விலே
என்று மிப்படி ஏங்கித் தவித்திடில்
பொன்றும் உயிரை வைத்தன் என்பதே.

75. வாலிசூரி வராகி மனோமணி
சூலி மாலி துர்க்கை துரந்தரி
பாலி பார்வதி பயிரவி திரிபுடை
சீலி உன்னடி சேர்வையுமே.

76. நம் உயிர்த்துணை நாகபூஷணி
நம் உடல்துணை நாகபூஷணி
நம் செயல்துணை நாகபூஷணி
நம் வழித்துணை நாகபூஷணி.

77. வேப்ப நிழலில் வீதியில் நாற்புறம்
காப்ப போலக் காட்சி யளித்திடும்
நாற்பண் ஓதும் அடியவர் சூழ்தர
நோக்க நிற்கும் கருணை என் என்பதே.

78. வேள முகத்தனை வேல் முருகன் தனை
வீரபத்திரவாகுவை ஐயனை
சூழவிட்டு தொல்புவி காத்திடும்
ஆழமிக்க அன்பை என் என்பதே.

79. ஐவர் எங்களை ஆட்டி அலைத்திட
உய்வதற்கு மார்க்கம் இலையென
செய்வதற்கு வழியற்று தேம்பிட
நைய வைத்த அருளை என் என்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. சோதியாக தோற்றி அருள்பவள்
நீதியாக அருள் தரவல்லவள்
பாதியாக பாகம் அமர்ந்தவள்
ஆதி அனாதி என்றும் இல்லாதவள்.

81. கற்கும் கல்வி கசடற கற்றவறிட
நிற்கும் எம்மை நிலைபெற செய்பவள்
பற்றி நிற்பவர் பக்கம் சேர்பவள்
சொற்கம் காட்டும் தூயவள் அன்னையே.

82. நாரணி உமை நாயகர் பங்குறை
காரணி எமையாண்டருள் கண்மணி
பூரணி புவனேஸ்வரி தாரிணி
ஆரணி எமை ஆண்டருள் வீரே.

83. வாழ வந்தோம் வழியினை காட்டுவாய்
மீள வந்தோம் மீட்டருள் செய்குவாய்
சூள வந்த துன்பதை போக்குவாய்
தாள் பணிந்தோம் தாங்கி அருள்வாய்.

84. நாடி வந்தவர் நடந்திடுமோசையும்
கூடி நின்றவர் கூப்பிடும் ஓசையும்
ஆடி வந்தவர் அழுதிடும் ஓசையும்
தேடி வந்தவர் திருவடி சேருமே.

85. அல்லல் பட்டவர் அழுதிடும் ஓலமும்
தொல்லைப் பட்டவர் துவன்றிடும் ஓலமும்
இல்லை எங்களுக் கிரங்கிகெனு ஓலமும்
வல்ல நாயகி வந்தருள் செய்யுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. அரனின் பாகம் அமர்ந்திடும் கோலமும்
பரவும் அடியவர் பார்த்திடும் கோலமும்
விரவும் பக்தர்கள் விரும்பிய கோலமும்
வரவிருந் தெமை வாழவைக்குமே.

87. உருகும் அடியவரை உயர்த்தும் பார்வையும்
கதறும் அடியவரை காக்கும் பார்வையும்
உதவுமென்று நோக்கும் பார்வையும்
பெருகும் கண்ணீரைக் கண்டு பார்ப்பளே.

88. தஞ்சம் நீரென தன்னடி சார்ந்தவர்
துஞ்ச வந்து தொழுதழுகின்றவர்
அஞ்சினோம் எமக்கருளெனக் கேட்டவர்
நஞ்சு கண்டத்து நாயகி நீயன்றே.

89. உண்மை நோக்கும் உரமும் வீரமும்
கண்ணில் நோக்கும் கருணையும் கொண்டு
வண்ணமாக வந்தெமை மாறிலாது
திண்ணமாக தீர்ப்பவள் அன்னையே.

90. பதியின் பாகம் பரிந்திருப்பதும்
வீதி முறை தருவது முத்து வேதமும்
மதிசடையுடையவர் மகிழ நிற்பதும்
கதியென அடியரை காத்து நிற்பதும்.

91. பலவித பரிமள கமள்கள் தூரியும்
நிலமிசை ஏறிமிகு நினதுவமும்
நலமுறு அந்தணர் மலர் சொரிவதும்
பெலமுறு வேதமும் பிறவும் தோற்றுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. உற்றுணர்ந்தவர் உருகி நிற்பதும்
பெற்ற பேறுளர் பெருகி நிற்பதும்
சுற்ற மேனி தோன்ற நிற்பதும்
அற்றவர்க் கருள் செய்தும் நிற்பதும்.

93. கண்டு போற்றிட கண்ணில் நிற்பதும்
தொண்டு செய்பவர் தொழுது நிற்பதும்
பண்டு பண்ணிசை பாடி நிற்பதும்
விண்டு சென்று விளங்க நிற்பளே.

94. தக்கன் வேள்வியில் தங்கை பாகனை
மிக்க மாதவன் வெறுத்து ஒதுக்கிட
துக்க மிக்கு தாக்கிய சொல்லினால்
பக்கம் நின்று பரிந்து வணங்கினான்.

95. ஞாலம் வாழ நவ உருக் கொண்டவள்
காலம் தோறும் கருதிட வைப்பவள்
சீலமாய் மண்ணில் போற்ற வைப்பவள்
கோலமாய் கண்கள் குளிர வைப்பளே.

96. மாயக் கடலிடை மயங்கி
நேயக் கண் கொண்டு ஞான சம்பந்தனை
தாயக் கோலத்தி தாங்கி திருமுலைப்
பாலையூட்டிய பார்வதி நீயன்றோ.

97. எங்கு நோக்கினும் உன் முகம் தோன்றும்
அங்கு நின்று அருள் புரிவீரே
இங்கு வந்து உம் இருப்பிடம் கண்டோம்
பொங்கும் அன்பொடு புவியில் புரண்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. சைவம் குன்றி தாழ்த்திட்ட வேளையில்
வையம் உய்யவும் மானிடர் போற்றவும்
துய்ய அன்பொடு பரிவுற்று காழியில்
கை கொடுத்து ஞான முதூட்டினீர்.

99. மண்ணில் தோன்றிய மானிடர் உய்யவும்
கண்ணில் நின்று களித்து இடர் போக்கவும்
எண்ணி எண்ணி இருந்தடி போற்றவும்
நண்ணி வந்து நமக்கருள் செய்வளே.

100. வாழும் போது வந்துடன் தோற்றுவாய்
வீழும் போது வேதனை போக்குவாய்
நாளும் வந்து நம்முடன் தோற்றுவாய்
மாளும் போது முன் நின்று காத்திடவே.

101. வீதியில் நிற்பவரை விழித்து நோக்கியும்
சோதியை கண்டவர் துவண்டு நோக்கியும்
ஆதியன் அம்மை யொடமர்ந்து நோக்கியும்
பாதியில் நோக்கி பரவி போற்றுவோம்.

102. சேர உமதடியினை சென்று சேரவும்
உளரிது எமதென உவந்து சேரவும்
நீரது உறைவிடம் நித்தம் சேர்வதும்
சேரவை உமதடியார்கள் சேர்வரே.

103. மறை மிக ஓதி மறையவர் நிற்பதும்
உறைவிடம் இதுவென உவந்து நிற்பதும்
கறைபடும் உயிர்களை காத்து நிற்பதும்
சிறைபாடும் வாழ்க்கையை தீர்த்து வைப்பீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. அன்பினில் உமது அடியைக் கண்டிட
முன்பு செய் தவமெனமுகம் மலர்ந்திட்டோம்
என்புருக நின்று இரு கண்ணும் நீர் சொரிந்து
துன்பம் தீர துவண்டெழுவோமே.

105. வேதம் ஓதிடும் வேதியர் ஓர்புறம்
பாதம் போற்றும் பக்தர்கள் ஓர்புறம்
யாதும் நீயென நம்பினர் ஓர்புறம்
நாதம் இசைக்கும் குழுவினர் ஓர்புறம்

106. பத்தும் பெற்ற பக்தர்கள் ஓர்புறம்
சித்தர் போல்நின்று திகைப்பவர் ஓர்புறம்
பித்தர் போல் பிதற்றுவர் ஓர்புறம்
முத்தர் போல முனைந்திடுவார்களே.

107. எண்குணம் கொண்ட ஏந்திளை ஓர்புறம்
மண்மிசை வந்த மங்கையர் ஓர்புறம்
கண்கலங்கிடும் கன்னியர் ஓர்புறம்
விண் கலங்கிட விம்மி அழுவரே.

108. வீணை மீட்டி இசைப்பவர் ஓர்புறம்
ஆணை காட்டி அழைப்பவர் ஓர்புறம்
தூணைக் காட்டி அழுபவர் ஓர்புறம்
காணக் கண்ணீர் கசிந்து நிற்பரே .

109. நட்ட கல்லினை போல் இருப்பார் சிலர்
பட்ட துன்பம் பாரும் என்பார் சிலர்
கெட்டு விட்டோம் தீரும் என்பார் சிலர்
இட்ட மிட்ட படியிதுவோ என்பார் சிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. பக்கம் வந்தெமைப் பாருமென்பார் சிலர்
மிக்க வேதனைப் பட்ட மென்பார் சிலர்
தக்கவாறு தணியுமென்பார் சிலர்
புக்கு நின்று புலம்பிடுவார்களே.

111. ஊரும் பேரும் உரைத்து நிற்பார் சிலர்
சீரும் சிறப்பும் அருளுமென்பார் சிலர்
நேரும் கற்பூரம் நேர்த்தி என்பார் சிலர்
பாரும் எம்மை என பரிந்திடுவார்களே.

112. கலைகள் ஆடி கவலையை மாற்றுவாய்
நிலையில் நின்று நிர்த்தனம் ஆடுவாய்
உலையில் இட்ட மெழுகென உருகுவார்
மலையிலீரென வரும் தருவாளே.

113. பாடி யேத்த பாட்டை வைத்தவர்
தேடி யேத்த திருவடி வைத்தவர்
கூடியேத்த கோயில் வைத்தவர்
தேடி வந்துன் திருவடி காண்பரே.

114. நித்தம் உம்மை நினைக்க வைத்ததும்
சித்தம் உம்மிடம் சேர வைத்ததும்
மத்த மனத்தை மாற்றி வைத்ததும்
அத்தனைக்கும் அன்புரு நீயன்றோ.

115. வாடிய எங்களை மகிழவைத்ததும்
தேடிய எங்களை நாட வைத்ததும்
ஓடிய எங்களை உறையவைத்ததும்
ஆடிய பாதம் அடங்க நிற்பீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. சிந்தித்த எங்களை திளைக்க வைத்ததும்
வந்தித்த எங்களை வாழவைத்ததும்
பந்தித்த வல்வினை பற்றறுத்ததும்
முந்தி செய்தவமது தானோ.

117. ஆடி ஓடி அலைய வைத்ததும்
தேடி தேடி நீரழைத்ததும்
நாடி வந்து நன்மை செய்ததும்
கூடி வந்திட கூட்டிய தாலோ.

118. அன்பு காட்டி அணைத்தெடுத்ததும்
பின்பு வந்து பிழைக்க வைத்ததும்
தம்மை காட்டி நன்றி வைத்ததும்
முன்பு செய்த தவமது தானோ.

119. நற்றவர் தொழகடல் நடுவிருப்பதும்
உற்றவர் உயிர்களை பற்றி நிற்பதும்
மற்றவர் பெற்றவர் மனம் மகிழ்வதும்
பெற்றது நீரெனும் பெருமையாலன்றோ.

120. நெஞ்சில் வந்து நெகிழ வைத்ததும்
துஞ்சி வந்து தொடர்பு வைத்ததும்
அஞ்சி வந்திட அருகிருக்கவும்
வஞ்சி நின்னருள் சொல்ல வல்லமோ.

121. கூடும் உம் அருள் கூட்டி வைத்ததும்
பாடும் நாவினை பாட வைத்ததும்
நாடும் உம்மிடம் நண்ண வைத்ததும்
வாடும் எங்களை வாழவைத்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. எண்ணி எண்ணி ஏங்க வைத்ததும்
நண்ணி நண்ணி நாட வைத்ததும்
தண்ணி தாண்டி தரையை கண்டிட
கண்ணில் நீரினை வாடிய வைத்ததே.

123. உம்மைக் கண்டால் உளம் மகிழ்ந்திடும்
உம்மைக் கண்டால் ஊனும் மறந்திடும்
உம்மைக் காண்டால் உயிரும் உய்ந்திடும்
உம்மைக் கண்டு உயர்ந்திடுவோமே.

124. அந்தணர் தம்மை அருகில் வைத்ததும்
நின்றவர் தொன்டை ஏற்று வைத்ததும்
வந்தவர் மந்திரம் ஓத வைத்ததும்
செந்தழல் மேனி சிலிர்ந்து நிற்குமே.

125. அருள் புரிகளை அசைய வைத்ததும்
பெருவிரல் ஒன்றினால் அழுத்தி வைத்ததும்
இருளூற கண்களை மூட வைத்ததும்
உருகிடும் அன்பின் பேதமை தானே.

126. வாடினோர்களை வாழவைத்ததும்
சாடினோர்களை தப்ப வைத்துதும்
ஓடினோர்களை ஒன்ற வைத்ததும்
நாடி நின்றிட மனது வைத்தீரே.

127. பவள மேனியும் பால் சொரி வதனமும்
குவளைக் கண்களும் கோமளப் பார்வையும்
தவளகில்லாத் தளிர் மலர்ப் பாதமும்
கவள முண்ட கணபதிக்கம்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128. ஆலமரத்தடி அமர்ந்திருக்கவும்
கோலமாக கோயில் சமைத்தர்
சால நின்னடி சார வைத்தனர்
ஞால முய்ய காட்டி வைத்தனர்.

129. முன்பு நீர் கண்ட முகங்கள் எத்தனை
பின்பு கண்ட முகங்கள் எத்தனை
இன்று காணும் முகங்கள் எத்தனை
என்றும் காண இருப்பது நீரே.

130. எண்ணினோர்களை எண்ண வைத்துள்ளீர்
நண்ணினோர்களை நண்ண வைத்துள்ளீர்
பண்ணினோர் கலை பயில வைத்துளீர்
மண்ணில் நாம் செய்த புண்ணியமாமே.

131. வாடினோர்களை வாழவைத்துளீர்
தேடினோர்களை தெரிய வைத்துளீர்
நாடினோர்களை நலமளித்துளீர்
ஓடி வந்தெம் உளத்துறைந்துளீர்.

132. அன்பினால் நாம் உருப்பெற்றிட
அன்பினால் வளர்ந்தும்மை நினைத்திட
அன்பினால் எமை ஆதரித்திட
அன்பு செய்த அன்பை என் என்பதே.

133. நாக படத்தோடு தொட்டிலும் பிள்ளையும்
தாகமாக நேர்த்தி வைத்தவர்
பாகமாக இருந்து பரிந்திட
வேகமாக முன் வந்து நிற்பீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

134. கூடிப் பக்தர்கள் கூட்டிசை ஓதுவர்
நாடி அந்தணர் நான்மறை ஓதுவர்
பாடி நிற்பவர் வருந்தி அலறுவர்
ஓடி ஓடி உள்ளம் குளிருவர்.

135. அரக்கனை மாட்டிய கையிலை வாகனம்
துரக்க ஐந்தலை குடை பிடித்திட
பரக்க நிற்கும் அடியார் மனம் ஒன்றிட
சுரக்க கண்ணீர் சொரிந்து நிற்பரே.

136. வட்டமாகிய வடிவுள்ள மலர் முகம்
எட்ட நிற்கும் எங்களை நோக்கிடும்
கிட்ட வந்து திருவருள் காட்டுவீர்
முட்ட நின்று மிடியை போக்குவோம்.

137. விந்தையாக வீதி யுலா வர
சிந்தை வைத்த அடியவர் பின்வர
எந்தையோடு இணைந்து மகிழ்வுறும்
பந்தம் கண்டு பார்த்தின் புறுவோமே.

138. பைந்தலைக்கு மேல்பட்டு குடையும்
நெஞ்சுடர்ச் சடையும் கங்கையும் மதியும்
நைந்தலைத்திடும் நலிவை போக்கிட
ஐந்தெழுத்துடன் அஞ்சலிப்போமே.

139. வரம் மிக ஊனென மதித்த இராவணன்
உரம் மிக கையிலையை அசைத்தசைத்திட
திரனுடை சிவன் விரல் சிரசில் பட்டிட
கரமொடு நரம்பிசை காட்டி வணங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. எள்ளினுள் எண்ணைப் போல் எம்முள் நீரிருந்து
உள்ளளவும் எமை திளைக்க வைத்திடும்
கள்ளமில்லாத கருணை காட்டிடும்
வள்ளலே உம்மை மறக்க வல்லமோ.

141. திருந்திய உடம்பொடு நெருங்கி வந்துளோம்
பொருந்திய எங்களை புகழுடன் வாழவை
அருந்திய ஊணும் அமுதென நினைந்தோம்
வரும் துயர் அகற்றி வாழ வைப்பீரே.

142. பஞ்சபூதங்களால் படைத்த இவ்வுயிர்
அஞ்சி அஞ்சி அலைவது தவித்திட
மிஞ்சி நிற்கும் வினை போக்கிட
துஞ்சி வந்து தொழுது நிற்போமே.

143. தொழுதிடும் கைகளை பெலப்படுத்தவும்
அழுதிடும் கண்களை விழிக்க வைக்கவும்
நழுவிடும் உயிர்களை காக்க வைக்கவும்
இப்பொழுதும் எப்பொழுதும் தொழுது நிற்பமே.

144. உமதருள் பெறவரும் அடியார்க்காக நீர்
எமதருள் இதுவென இசைய காட்டுவீர்
நமதினில் இதுவென நயந்து போற்றிட
தமதருள் இதுவென தந்திடுவீரே.

145. மண்ணில் விண்ணில் மனத்தினில் நாவினில்
கண்ணில் ஒளியில் கருத்தினில் நினைவினில்
எண்ணில் இயற்கையில் இனிய இதயத்தில்
நண்ணி நிற்கும் நாக பூஷணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. குற்றம் அற்றவர் கூடும் உன்கோயிலில்
கற்றவர் அற்றவர் காண துடிப்பவர்கள்
கொற்றவன் எமை கொண்டிட வந்தால்
உற்றவள் நானென ஓட்டிடுவீரே.

147. பாடும் ஓசையும் பக்தர்கள் ஓசையும்
நாடும் எம்மை நடுங்க வைத்திடும்
கூடும் தோளும் உள்ளம் உருகிடும்
சாடும் வல்வினை தீர அணைப்பளே.

148. கானம் பாடுவர் கலைகள் ஆடுவர்
தேனும் பாலும் போல் சேர்ந்து கூடுவர்
பானம் அருள் பெருக வேண்டுவர்
நானும் நீயும் ஒன்றென கூறுவர்.

149. அம்மாவைத் தேடி அம்மா என்றனர்
விம்மா நின்று அம்மா என்றனர்
இம்மாநிலத்தில் அம்மா ஒருவளே
நம்மால் காண்பது நாகபூஷணியே.

150. உடம்பு எமதில்லை உயிர் உம்மதே
திடம் குலைந்தோம் தோற்றுவார் இங்கில்லை
நடம்பயின்றவர் நாயகி எங்களை
கடந்து வந்து காட்சி தருவீரே.

151. செம்மையான திருவடிவானவள்
இம்மை எங்களை எழிலுற செய்பவள்
நம்மை எல்லாம் நாளும் காப்பவள்
அம்மைக்கும் அருள் கொடுப்பளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152. வீடு தோறும் உன் நாமம் விளங்கிடும்
பீடு நீங்க உம்பாதம் தொழுபவர்
காடு போல் மனம் பற்றிய போதொல்லாம்
நாடு மெம்மை நலமுற வைப்பளே.

153. தேக்கு நீரென தோன்றிடும் கண்களும்
நாக்கு நீரொடு வற்றிய கண்களும்
போக்கினியிலை என புனல் சொரி கண்களும்
நோக்கி வந்து இருளினை போக்குவாய்.

154. நாகம் போற்றும் நாகபூஷணி
பாகம் உறையும் பத்ம லோஷனி
தாகம் தரவரும் தர்ம லோஷனி
சோகம் தீர்க்கும் சொரூப லோஷனி.

155. பாதம் நாளும் பணிய பெறுவரேல்
ஓதும் கீதம் உவந்து இசைப்பரேல்
சூதுவாது துன்பம் களைவரே
யாதும் நீயென நம்பிடுவார்களே.

156. அரன் அருகிருக்கும் அம்மை அபயம்
வரமருள் தரவென வணங்கிட அபயம்
உரமருள் உளத்தில் உறைவாய் அபயம்
மரவுரி தரித்த மங்காய் அபயம்.

157. பஞ்சபாணி பயிரவி பார்வதி
வஞ்சி நீளி வராகி மகேஸ்வரி
சிந்தை வந்த சிவகலை திரிபுடை
பஞ்ச பூத உடலிது பார்த்திடே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. அரவணியாக அணிபவன் அரனே
அரவின முகத்தை அணிபவள் உமையே
அரவை வளர்ப்பது அரனின் பணியே
அரவின் உலகம் அம்மை பாகனே.

159. தேரில் உமைக்கண்டு பக்தர்கள்
நேரில் நின்று நெரிபடுவார்கள்
பாரில் பக்தர்கள் பார்த்து மகிழ்ந்திட
ஊரின் வீதி உலா வருவீரே.

160. அஞ்சினால் உருவமாகி அதனுள்ளே ஐந்துமாகி
அஞ்சினால் அணைத்தலாகிஅம்மையே மறத்தலாகி
துஞ்சிருள் போக எண்ணி தூய அஞ்செ ழுத்தை ஓத
நெஞ்சினுள் இருப்பதாகி நீடருள் புரிவரன்றே வேறு

161. நாகபூஷணி யென்ஓதில்நமக்கொருகுறையும் இல்லை
நாகபூஷணியென்ஓதில்நலிவுறாச் செல்வம் உண்டாம்
நாகபூஷணி யென் ஓதில் நம்மிடர் அகலும் என்றும்
நாகபூஷணி யென் ஓதில் ஜமன் வர அஞ்சுவானே.

### அம்பிகை முத்துப்பாட்டு

162. பவள முத்து பச்சை முத்து
கவள முத்து கணபதி முத்து
குவள முத்து குவலய முத்து
தவள முத்து சர்ப்பமுத்து.

163. சித்தி முத்து சிப்பிக்குள் முத்து
சக்தி முத்து சரவண முத்து
அத்தி முத்து அரவுதரும் முத்து
புத்தி முத்து புகழ் தரும் முத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164. நாக முத்து நராணி முத்து
ஏக முத்து இதய முத்து
பாக முத்து பரமனின் முத்து
தாக முத்து எமை தாங்கிடும் முத்து

165. பக்தி முத்தி பழுக்கு முத்து
புத்தி யுத்த புரியும் முத்து
பக்தி யற்றால் பரிந்தருள் முத்து
நத்தி முத்து நாகபூஷணி முத்து

166. உலக முத்து ஒளி விடும் முத்து
நிலவு முத்து நினைக்கும் முத்து
பலவும் முத்து பச்சை முத்து
குலவு முத்து குவலய முத்து

167. நாளும் முத்து நமக்களுள் முத்து
தாளும் முத்து சந்ததம் முத்து
ஆளும் முத்து அணைக்கும் முத்து
வீளும் போது வெளிவரும் முத்து.

168. தங்க முத்து சாதியும் முத்து
பங்க மில்லா பாக்கிய முத்து
எங்கள் இதயம் இருக்கு முத்து
சங்கமமான வாழ்வு முத்து.

169. கண்களாலே காண்பது முத்து
பண்கள் முத்தி பழுக்கும் முத்து
எண்கள் முத்து எழுத்து முத்து
விண் மண் தோன்ற விளங்கும் முத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. மாற்ற மிலாது ஒளிவிடும் முத்து
தோற்றி நிற்கும் சுடரொளி முத்து
நீற்றர் மேனி நிறமும் முத்து
போற்ற நிற்கும் புனித முத்து.

171. யூழியாக உறையு முத்து
நாளியாக தொழுவோர் முத்து
வாழியாக வாழ்த்து முத்து
சூழிவாது தோன்றிடும் முத்து.

172. ஊருளோர்கள் உயிரும் முத்து
காரும் முத்து கடலுள் முத்து
பேரும் புகழும் பெற்றது முத்து
பாரிளோர்கள் பணியும் முத்து.

173. நாக முத்து நயினை பூஷணி முத்து
வேக முத்து வினைதீர்க்கு முத்து
ஆக முத்து அதுவே முத்து
சாகும் போது தனி வழி முத்து.

174. மலையில் முத்து மலை மகளும் முத்து
கலையும் முத்து கங்கையு முத்து
சிலையும் முத்து திங்களும் முத்து
நிலையும் முத்து நிகரிலா முத்து.

175. கோல முத்து குளிரும் முத்து
நீல முத்து நிலையுள முத்து
பால முத்து பசும் பொன் முத்து
சீல முத்து திகழும் முத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. கல்லில் முத்து கசிவுறு முத்து
நெல்லில் முத்து மணியும் முத்து
சொல்லில் முத்து தோன்றிய முத்து
வல்லி தாக வந்திடும் முத்து.

177. பாச முத்து பரிந்தருள் முத்து
நேசமுத்து நித்தியம் முத்து
ஆசை முத்து அறியொனா முத்து
பூசை முத்து புவிக்கெலா முத்து.

178. அல்லல் தன்னை அகற்றும் முத்து
எல்லையில்லா இலங்கும் முத்து
நல்ல முத்து நாம்பணி முத்து
சொல் முத்து சிவன் பெறு முத்து.

179. நித்தம் வந்து தோன்றும் முத்து
சித்தம் வைக்க செய்யும் முத்து
உத்தமமான உருவ முத்து
பத்தரைக் கண்டு பரிந்தருள் முத்து.

180. காஞ்சி முத்து கடும் தவமுத்து
நாஞ்சி முத்து நமக்கருள் முத்து
வாஞ்சி முத்து வல்ல முத்து
தோஞ்ச பாகத் துறையும் முத்து.

181. பாக முத்து பராபரன் முத்து
தியாக முத்து செம்மை முத்து
வேக முத்து வேள முத்து
ஆக முத்து அரனின் முத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182. நீல வண்ணனின் நேரிணை முத்து
ஆலமுண்ட வணைக்கு முத்து
வேலவன் தனை ஈன்ற முத்து
கோல வேள முகத்தோன் முத்து.

183. இங்கும் அங்கும் இருக்கு முத்து
எங்கும் என்றும் இலங்கு முத்து
தங்கும் முத்து தாரணி முத்து
பொங்கும் இதயத்துறையும் முத்து.

184. உருவத்துள்ளே ஒளியும் முத்து
அருவமாகி ஆட்டும் முத்து
பருவம் வந்தால் பழுக்கும் முத்து
திருவும் சிறப்பும் தந்திடும் முத்து.

185. பாதம் நாளும் பணிய பெறுவரேல்
ஓதும் கீதம் உவந்து இசைப்பரேல்
சூது வாது துன்பம் களைவரே
யாதும் நீயென நம்பிடுவார்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

தந்தையை இழந்து தவித்தவேளை நேரில் வந்து ஆறுதல் தந்தோர் தொலைபேசி வழி ஆறுதல் பகிர்ந்தோர் மின்னஞ்சல், கடிதம் வழி ஆறுதல் பகிர்ந்தோர் அஞ்சலிக் குறிப்பு வெளியிட்டும் மலர் வளையம் வைத்தும் அஞ்சலித்தோர் குறிப்பாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகதினர், யா/இந்து ஆரம்பப் பாடசாலைச் சமூகத்தினர், யாழ்ப்பாணம் மின்சார சபைச் சமூகத்தினர் மற்றும் எல்லாவழிகளிலும் ஆறுதலளித்த உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், நோயுற்ற வேளை பராமரிப்புச் செய்த வைத்தியர்கள், கல்விச் சமூகத்தினர், தாதியர்கள், சிற்றூழியர்கள், சுடுகாடுவரை தொடர்ந்து வந்து துயர் பகிர்ந்த உறவுகள் இன்றைய அஞ்சலி நிகழ்விலும், வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் பங்குபற்றிய அன்பர்கள் அனைவரும் நினைவு வெளியீட்டை அழகுற வடிவமைத்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தார் இன்னும் பலரும் நன்றிக்குரியவர்கள்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Harikanan (Pvt.) Ltd., Jaffna.